
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1286

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

127

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## ‘அல்லாதார்’ என்ற இழிவான நிலை, நமக்கு வேண்டாம்!

*23.5.1944* அன்று திருச்சியில் உள்ள நடராஜா டாக்கீஸில், ‘திருச்சி திராவிட இளைஞர் மாநாடு’ எழுச்சியோடு நடைபெற்றது. வி.நாராயணசாமி அவர்களின் சுயமரியாதை இயக்கப் பாடல்களுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின.

சௌந்தரபாண்டியனார், ஈ.வெ.கி. மிராண்டா, கோகிலா பாய், கோசி பெரியசாமி, சி.பி.சின்னராசு உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட தலைவர்கள் மேடையில் வீற்றிருந்தனர்.

அப்போது, மாநாட்டைத் திறந்துவைத்து உரையாற்றிய பெரியார், “தோழர்களே சிறிது காலம் வரையில், ‘பார்ப்பனர் அல்லாதோர் மாநாடு’, ‘தமிழர் மாநாடு’, ‘சுயமரியாதை மாநாடு’ என்ற பெயர்களில் கூட்டங்களைக் கூட்டி, நமது கருத்துகளைப் பேசிவந்தோம். ஆனால் இப்போது, ‘திராவிட இளைஞர் மாநாடு’ என்ற பெயரில், நாம் இந்த மாநாட்டை நடத்துகிறோம். நாம் இந்த நாட்டில் சம உரிமையுடைய மக்களாய் இருந்தும், சமுதாயத்தில் இழிந்தவர்களாகவும், பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவும், இருந்துவருகிறோம். நம்முடைய நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

காரணம் என்ன என்று யோசித்தோம். எந்த நாட்டு மக்களும் அல்லது சமுதாயமும் முன்னேற வேண்டுமானால், அந்த மக்களுக்கு அல்லது அந்த சமுதாயத்துக்குப் பொது உணர்ச்சியும் ஒற்றுமை மனப்பான்மையும் உண்டாக்கக்கூடிய ‘இலட்சியச் சொல்’ அல்லது ‘குறிச் சொல்’ ஒன்று தேவை என்பது விளங்கியது.

பார்ப்பனரல்லாதோர் என்று நம்மை நாம் ஏன் கூறிக்கொள்ள வேண்டும்?, ‘நாம் திராவிடர்’. நம் எதிரிகள் வேண்டுமானால், திராவிடர் அல்லாதவர் என்று அவர்களை சொல்லிக்கொள்ளட்டுமே. அந்த அல்லாதார் என்ற வார்த்தையே, இழிவை உணர்த்தும் சொல்லாகும்” என்றார்.

பெரியார் பேசி முடித்த பிறகு, பேராசிரியர் க.அன்பழகன் கொடி ஏற்றிவைத்தார். பி.என்.சதாசிவம் வரவேற்புரை வாசிக்க, நாவலர் நெடுஞ்செழியன் மாநாட்டிற்குத் தலைமைதாங்கி சொற்பொழி வாற்றினார்.

மதிய உணவுக்குப் பிறகு, மீண்டும் பிற்பகல் 3.15 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. மாரிமுத்து, கலியபெருமாள், கா.முருகையா ஆகிய தோழர்கள் சுயமரியாதை கீதங்களை, பாரதிதாசன் பாடல் களையும் பாடினர். மாநாட்டில், திராவிட நாடு படத்தை பேரறிஞர் அண்ணா திறந்துவைத்துப் பேச இருந்த நிலையில், எதிர்பாராத விதமாக அவர் வருகை தர இயலவில்லை. அதனால், பு.ஜனார்த்தனன் ‘திராவிட நாடு’ படத்தைத் திறந்துவைத்தார்.

மறைந்த மாயவரம் நடராசன் அவர்களைப் பற்றியும், அவர் சுயமரியாதை இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டைப் பற்றியும் அ.பொன்னம் பலனார் பேசினார்.

அதன்பிறகு, அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராக இருந்த கே.ஏ.மதியழகன், சிறிது நேரம் பேசினார். பின்னர், முக்கியத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இறுதியில், தலைவர் முடிவுரையுடனும் மாநாட்டுச் செயலாளர் நன்றியுரையுடனும் மாநாட்டு நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்கு முடிவுற்றன.

**...கூட்டம் திரளும்**

## ஊடகங்களின் கூட்டணி, நாட்டுக்கு நல்லதல்ல!

**கா**விரி உரிமையை நிலைநாட்ட, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை த.வெ.க. அரசு கூட்டவில்லை. இதற்கான விவாதங்களை நடத்தாத ஊடகங்கள், தொகுதி மறுவரையறைக் கூட்டத்தில் தி.மு.க. கலந்து கொள்ளவில்லை என விவாதம் செய்வதன் பொருள் என்ன? எனக் கேள்வி எழுப்பி இருக்கிறார், பத்திரிகையாளர் சே.இளங்கோவன். அவரது பதிவில்,

“ஆகஸ்ட் 8 அன்று, தொலைக்காட்சி விவாதங்கள் என்னை வியப்படையச் செய்துவிட்டன. அனைத்தும் முதல்வர் விஜய் கூட்டிய தொகுதி மறுவரையறை பற்றிய அனைத்துக் கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க., ம.நீ.ம. எம்.பிக்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பது பற்றியதாகவே இருந்தன. கலந்துகொண்டவர்கள் 20 பேர். கலந்துகொள்ளாதவர்கள் 37 பேர். ஏன் இப்படி?

சாதாரணமாக, நம் வீட்டில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்குப் பிறரை அழைக்கச் செல்லும்போது என்ன செய்வோம்? அந்தக் குடும்பத்திலுள்ளவர்களில் யார் வயதில் பெரியவரோ, அவருடைய பெயரைத்தான் அழைப்பிதழில் எழுதிக் கொடுப்போம். முதலில் அவரை அழைத்த பிறகுதான் மற்றவர்களை அழைப்போம். சாதாரண குடும்ப நிகழ்ச்சிக்கே இப்படியொரு முறை என்றால், அரசு நிகழ்ச்சிக்கு இருக்காதா என்ன? என்னதான் முதல்வர் அழைப்பதாக இருந்தாலும், அந்தந்த எம்.பி.க்களின் கட்சித் தலைவருக்கு அழைப்பை அனுப்பித்தான் அவர்களுடைய கட்சி எம்.பி.க்களைக் கூட்டத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ள வேண்டும். கூடவே, எம்.பி.க்களுக்கும் தனித்தனியாக அனுப்பலாம். எந்தவொரு எதிர்க்கட்சி நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரும் அவரவர் கட்சித் தலைவருடைய அனுமதியின்றி, அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மாட்டார். இந்த வழிமுறைகூடவா இன்றைய ஆளும் அரசுக்குத் தெரியாமல்போனது?

இந்த வழக்கமான நடைமுறையை ஆளுங்கட்சிக்காகப் பேசியவர்கள் முற்றிலும் ஒதுக்கிவிட்டுப் பேசியதை, நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தும் நெறியாளர்களும் அது பற்றிக் கவலைப்படாமல் நெறிபிறழ்ந்துபோனதேன்? எதிர்க் கட்சிகளை விமர்சிப்பதில், ஆளுங்கட்சியைவிட ஊடகங்கள்தான் அதிக உற்சாகம் காட்டுகின்றனவோ என்று யோசிக்கவைக்கிறது.


எல்லாம் சரி, எல்லா எதிர்க்கட்சிகளும் ஒற்றைக் குரலில் உரத்துச் சொல்லியும் காவிரி விஷயத்திற்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படாமலிருப்பதற்கு என்ன காரணம்? ஏன் இந்தத் தலைப்பில் எந்த ஊடகமும் விவாதிக்கவில்லை? இதற்கான பதில், மக்களுக்கு மிக நன்றாகத் தெரியும் என்பதை ஊடகங்கள் உணர வேண்டும். ஆளுங்கட்சியோடு, எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல; ஊடகங்கள் கூட்டணி வைப்பதும், நாட்டுக்கு நல்லதல்ல” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

127

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## நாள் மலர்கள்

ஒரு தகவலை சுவாரசியமாக, அதே சமயத்தில் எளிமையான மொழி நடையில், மாணவர்களுக்கும் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளை, உள்ளடக்கிய நூல், பண்பாட்டு ஆய்வாளர் தொ.பரமசிவன் அவர்களின் ‘நாள் மலர்கள்’. தமிழ் மின் நூலகத்தில் படிக்கக் கிடைக்கிறது.

முதல் கட்டுரை, கல்வெட்டுகளின் முக்கியத் துவத்தைப் பற்றியும் அவற்றை அழியாமல் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் பேசுகிறது. ‘இராமாயணம்’ எழுதிய கம்பர், தனது பாத்திரங்களை எப்படி எல்லாம் அறிமுகப் படுத்தினார்.. ஒவ்வொரு பாத்திரத்தின் அறிமுகத்திற்கும் அவர் காட்டிய வேறுபாடுகள் எத்தகையவை என்பதை எல்லாம் பேசும் கட்டுரை ‘கம்பனின் அறிமுகம்’.

‘மக்கள் காப்பியம்’ எனப்படும் சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள், ஒரு தேர்ந்த அரசியல்வாதி’ என்கிறார் தொ.ப. நவீன தமிழ் இலக்கியம் பாரதியில் இருந்தே தொடங்குவதாக வரையறை செய்யும் தொ.ப. கட்டுரை, கவிதை, மொழி பெயர்ப்பு, இதழியல் எனப் பரந்துபட்டு இயங்கிய பாரதி, ‘நேற்றை’ விட ‘நாளை’யில் அதிக கவனம் செலுத்தியதாக அவதானிக்கிறார்.

அடுத்ததாக, அறிவியல் தமிழ் என்ற கட்டுரை பல புதிய வரலாற்றுத் தரவுகளை நமக்களிக்கிறது. 1999-இல் தமிழநாடு அரசு (தி.மு.க.) ஏற்பாடு செய்த ‘இணையம் - 99’ என்ற நிகழ்ச்சியை, அறிவியல் தமிழ் வளர்ச்சியில் முக்கியமான ஒன்றாகக் குறிப்பிடுகிறார். காரணம், அந்த நிகழ்ச்சி பல நாட்டு அறிஞர்களையும் சென்னைக்கு அழைத்து நடத்தப்பட்ட ஒன்றாக இருந்தது. கணிப்பொறித் தமிழ் விசைப்பலகைகளும், தமிழ் மொழியியல் மென்பொருள்களும் தரப்படுத்த, அம்மாநாடு உதவியதாகக் குறிப்பிடுகிறார்.

> **இந்நூலில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்டுரைகளும் ஏதோ ஒரு வகையில் சுவாரசியமானவை. பல முக்கியத் தகவல்களைக் கொண்டுள்ளவை.**

தமிழ் இதழியல், ஆரம்பத்தில் வளர்ந்த விதத்தையும் இங்குள்ள அரசியல் இயக்கங்கள் அவற்றைப் பயன்படுத்திய விதத்தையும், பின்னர் அது எப்படி பொருளாதார நோக்கங் கங்களை முதன்மையாகக் கொண்டு கருத்தளவில் நலிவடைந்தது என்பதையும், இக்கட்டுரையில் பேசுகிறார். இறுதியில், சிற்றிதழ்களின் வருகையைத் தமிழ் இதழியலுக்கு ஆரோக்கியமான ஒன்றாகவே பார்ப்பதாகக் கூறி முடித் துள்ளார்.

ஆறுகளாலும் மலைக் குன்றுகளாலும் சூழப்பட்டுள்ள மதுரை மாநகரை சிலாகித்து எழுதியுள்ளார். இன்றைக்கும் மதுரைதான் தமிழ்நாட்டின்/ தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரமாக விளங்குவதாக இக்கட்டுரை முடிகிறது.

இந்தத் தொகுப்பின் இறுதிக் கட்டுரையாக, ‘அகராதி கலை’ என்ற கட்டுரை இடம்பெற் றுள்ளது. நவீன சொல் அகராதிகள் வருவதற்கு முன்பே, தமிழ் மொழியில் ரேவண சித்தர் எழுதிய ‘அகராதி நிகண்டு’ நூலை, குறிப்பிடு கிறார். மேலும், தொல்காப்பியர் காலத்திலேயே அகராதியில் இருப்பதைப் போல சொல்லுக்குச் சொல் பொருள் குறிப்பிடும் முறை தொடங்கி விட்டதாகக் கூறும் தொ.ப., அதற்குப் பின்னான அகராதிகளின் வரலாற்றையும் சுருக்கமாக எழுதியுள்ளார்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்டுரைகளும் ஏதோ ஒரு வகையில் சுவாரசியமானவை. பல முக்கியத் தகவல்களைக் கொண்டுள்ளவை. ஆழமான, அதே வேளையில் செறிவான கருத்துகளைக் கொண்டவை. தமிழ் இலக்கிய பாடத்திட்டத்தில் இந்நூல் இடம்பெற்றிருந்தது என்ற செய்தியே ஒரு திருப்தியை ஏற்படுத்துகிறது.

**...வாசிப்போம்.**

# ஃப்ளாஷ்பேக்



## பொய் வழக்கில் கைதும் விடுதலையும்



ஏ.டி.மணி

**2002** ஆம் ஆண்டு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்தபோது, பொய் வழக்கொன்றில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன். கழக வழக்கறிஞர் அணியின் உதவியுடன் சிறையில் இருந்து விடுதலையானேன். அதையடுத்து, அறிவாலயத்தில் தானைத் தலைவர் முத்தமிழறிஞரையும், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவரையும் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். உடன், அன்றைய மாவட்டச் செயலாளர் அண்ணன் பலராமன், கழக அமைப்புச் செயலாளர் அண்ணன் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

**- ஏ.டி.மணி,**
**தண்டையார்பேட்டை, முன்னாள் பகுதிச் செயலாளர்,**
**ஆர்.கே.நகர் மேற்கு, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# நம் வரலாறு

## 20 ஆயிரம் பேர் சிறையில் அடைப்பு!

1962-ஆம் ஆண்டு, கழகம் நடத்திய விலைவாசி உயர்வுப் போராட்டம், தமிழ்நாடு முழுவதும், மாவட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன், அமைதியான முறையில் மறியல் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மறியலில் கைதுசெய்யப்பட்டவர்கள் 20,000 பேர் என காவல் துறையினர் குறிப்பிட்டனர். இவர்கள் அனைவரும் குற்றவியல் திருத்தச் சட்டம் - 7 - (பி) - 1 - பிரிவின்படியும், இதரப் பிரிவின் கீழும் குற்றம் சுமத்தப்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சை, சென்னை, வேலூர் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900